## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.35/2014

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேஷ்வரி | மதம் | : இந்து |
| க/பெ | : கஜேந்திரன் | ஜாதி | : -- |
| வயது | : 34 | கிராமம் | : அருங்குளம் |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : திருத்தணி |

**17.11.2025**

**<u>வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கில் உள்ள சுப்பிரமணி எனது உறவினரா என்றால் இல்லை. வாதி மன்னேசம்மாளின் தம்பி மகள் அம்சாவை சப்பிரமணி திருமணம் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மன்னேசம்மாள் எனக்கு என்ன உறவு என்றால் என் கணவரின் பாட்டி ஆவார். 1ம் பிரதிவாதி எனது உறவினர் என்ற விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மன்னேசம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் துரை, ராதாகிருஷ்ணன் என்ற இரண்டு பிள்ளைகள். ராதாகிருஷ்ணன் எனது மாமனார் என்றால் சரிதான். துரை உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். ராதாகிருஷ்ணன் காலமாகிவிட்டார்.

2. ராதாகிருஷ்ணனின் மனைவி நாகம்மாள் அவரது பிள்ளைகள் கஜேந்திரன், பானுமதி ஆகியோர் உயிருடன் உள்ளார்கள் என்றால் சரிதான். நான் கஜேந்திரன் மனைவி என்றால் சரிதான். எனக்கும் கஜேந்திரனுக்கும் எப்போது திருமணம் ஆனது என்றால் 2004 ஆகும். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் 1ம் பக்கத்தின் பின்புறம் உள்ள புகைப்படத்தில் உள்ளவர் என் மாமியார் என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் பி.வா.சா.ஆ4ல் உள்ள 1ம் பக்கத்தின் பின்புறம் உள்ள புகைப்படம் பி.வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் 2ம் பக்கத்தின் பின்புறம் உள்ள

புகைப்படத்தில் உள்ளவர் என் கணவர் என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் பி.வா.சா.ஆ4ல் உள்ள 2ம் பக்கத்தின் பின்புறம் உள்ள புகைப்படம் பி.வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படுவது பதிவு செய்த கிரைய ஆவணம் என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ 4 ஆவணம் புல எண்.93/3A, விஸ்தீரணம் 0.42.0 ஹேர்ஸ் அதாவது 1 ஏக்கரா 4 செண்டிற்கு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துதான் இந்த வழக்கு சொத்து என்றால் புல எண்.93/3A க்குதான் வழக்கு நடக்கிறது. 01.11.2006ல் மேற்படி சொத்தை பதிவு செய்த ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துள்ளனர் என்றால் அவர்களுக்கு உரிமையில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நாகம்மாளுக்கும், கஜேந்திரனுக்கும் உரிமையிருப்பதால்தான் 2006ல் சுப்பிரமணிக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல. மன்னேசம்மாள் உயிருடன் இருந்தபோது நாகம்மாள் கஜேந்திரனுடன் இருந்தார்கள் என்றால் ஆமாம். எங்களுடன்தான் இருந்தார். 13.12.2012ல் மன்னேசம்மாள் என் கணவருக்கு பி.வா.சா.ஆ 1 செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் எழுதி வைத்தார். அதை ரத்து செய்துவிட்டார்.

4. 19.09.2013ல் அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 2ல் 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் பி.வா.சா.ஆ2ல் உள்ள 1வது சாட்சி கையெழுத்து பி.வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மன்னேசம்மாள் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொத்து மதிப்பு 26லட்சம் என 2012ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் **(சாட்சியிடம் பி.வா.சா.ஆ 1 ஆவணம் காட்டப்பட்டது)** சரிதான். பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் 2006ல் சொத்தின் மதிப்பு ரூ.98,800/- என காட்டப்பட்டுள்ளது என்றால் **(சாட்சியிடம் பி.வா.சா.ஆ 4 ஆவணம் காட்டப்பட்டது)** எனக்கு தெரியாது.

5. 2006ல் வழக்கு சொத்தின் மதிப்பு ரூ.1 லட்சத்திற்கும் குறைவாக இருந்தது என்றாலும் 2012ல் சொத்து மதிப்பு ரூ.26 லட்சமானதால் சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 12 உயில் ஆவணத்தில் உள்ள முத்திரை தாளில் ராஜேஷ்வரி அருங்குளம் என உள்ளது என்றால் சரிதான். முத்திரை தாள் நான்தான் வாங்கினேன்.

முத்திரை தாள் தேதி 03.12.2018 என உள்ளது என்றால் ஆமாம். உயில் எழுதப்பட்ட தேதி ஆகஸ்ட் 02, 2019 என்றால் சரிதான். 8 மாதம் கால இடைவெளி உள்ளது என்றால் சரிதான். பொதுவாக உயில் எழுதும்போது உயில் எழுதிகொடுப்பவர் பெயரில்தான் முத்திரை தாள் பெயர் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எனக்கு அனைத்து விவரங்களும் தெரியும் என்றாலும் சரியல்ல.

6. மன்னேசம்மாள் இறந்த பின்பு பொய்யாக இந்த உயில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. **"படிக்க கேட்டேன் நான் சொல்லியப்படிதான் உள்ளது"** என்ற வாசகம் வா.சா.ஆ 12 உயிலில் இல்லை என்றால் சரிதான். **"அ.எண்.35/2014 வழக்கை தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் அதை தொடர்ந்து மேல்முறையீடை தொடர்ந்து நடத்த வேண்டும்"** என்ற வாசகம் வா.சா.ஆ 12 உயிலில் இல்லை என்றால் சரிதான். மேற்படி வாசகங்கள் இல்லாததால் இந்த உயில் செல்லாதது என்றால் தவறு. மன்னேசம்மாளுக்கு உரிமையில்லாத சொத்தை எங்களுக்கு வழக்கு நிலுவையில் இருக்கும்போது கொடுத்தது தவறு என்றாலும் எங்களுக்கு வழக்கு நடத்த எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. 2006ல் வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதிக்கு விற்ற போது மன்னேசம்மாள் எங்களுடன்தான் இருந்தார் என்றாலும் அதனால் எங்களுக்கு அந்த கிரைய விவரம் தெரியும் என்றாலும் அவர் யாருக்கும் விற்கவில்லை.

7. 2012ல் வழக்கு சொத்தின் விலை ஏறியதால் வழக்கு சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என வா.சா.ஆ 1, வா.சா.ஆ 2 ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. மன்னேசம்மாளின் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மன்னேசம்மாளின் அனைத்து வாரிசுகளையும் இந்த வழக்கில் சேர்க்காததால் தேவையான தரப்பினரை சேர்க்காத தோஷத்திற்கு உள்ளானது என்றால் சரியல்ல. வழக்கில் கேட்டுள்ள பரிகாரமும் தவறானது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும்போது அனுபவத்தில் இல்லாததால் விளம்புகை, ஒப்படைப்பு பரிகாரம் கோரியிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. நாங்கள் 26 லட்சம் மதிப்புள்ள சொத்திற்கு தவறாக நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. 2006ல் சொத்தை கிரையம் கொடுத்துவிட்டு 2014ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில்

குறிப்பிட்டுள்ள வழக்கு மூலமே தவறானது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)